Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 5/2026**

வழக்கு சாட்சி எண். PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | கிராமம் | : | குரும்பட்டி |
| தந்தை பெயர் | : | தீர்த்தகிரி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 60 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார் ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **7th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது குரும்பட்டியில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

ஒருநாள் மாதம் தேதி சரியாக நியாபகம் இல்லை. ஒருநாள் அசா1ன் வீட்டில் நகை பறித்து சென்றது தொடர்பாக போலீசார் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அந்த வழியாக சென்ற என்னிடமும் சாமிநாதன் என்பவரிடமும் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து மகசர் தயார் செய்ததற்காக சாட்சி கையொப்பம் செய்யும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் நானும்

சாமிநாதனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் போலீசார் அந்த இடத்திலேயே என்னிடம் மற்றொரு கையொப்பம் செய்யும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் சாமிநாதனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. **இன்று என்னிடம் காட்டப்படும் 28.12.2025ம் தேதி 12.30 மணியளவில் சம்பவயிடத்தில் இருந்து classic என்று பெயர் பதியப்பட்ட சாம்பல் நிற குள்ளா கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(எதிரி தரப்பில் இருந்து இலவச சட்ட உதவிகள் மூலம் நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. K.குமரவேல் என்பவர் ஆஜர் ஆகாத படியாலும் நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படவிருந்த Amicus curiaeயை எதிரி மறுத்துவிட்டதாலும் சாட்சியின் வயது மூப்பின் காரணமாகவும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தேதி ஒத்திவைக்கப்படாமல் முடித்து வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**